சுருக்கம்

நாகர்கோவில் மாநகராட்சியுடன் அருகில் உள்ள தெங்கம்புதூர் மற்றும் ஆளூர் பேரூராட்சிகளை இணைத்து எல்லை விரிவாக்கம் – உறுதி செய்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை**

**அரசாணை (நிலை) எண். 120** **நாள்: 07.12.2021**

**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**பிலவ, கார்த்திகை–21**

**படிக்கப்பட்டது:**

(1) நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் கடிதம் ந.க.எண்.எப்.1/7879/2021, நாள் 22.09.2021.

(2) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கடிதம் ந.க.எண்.எப்.1/7879/2021, நாள் 22.09.2021.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண்.20782/2021/மாநஅ–1, நாள் 27.09.2021.

(4) அரசாணை (நிலை) எண்.84, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 14.10.2021.

(5) நகராட்சி நிர்வாக இயக்குர் கடிதம் ந.க.எண்.20782/2021/மாநஅ1, நாள் 26.11.2021.

******

**ஆணை :**

சட்டப்பேரவையில், 2021–22 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது, பிறவற்றுடன், "நாகர்கோவில் மாநகராட்சியுடன் அருகில் வளர்ச்சியடைந்துள்ள பேரூராட்சிகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்படும்" என மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

**2.** இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, முறையே மேலே ஒன்று முதல் மூன்று வரை படிக்கப்பட்ட நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோரின் செயற்குறிப்பின் அடிப்படையில், நாகர்கோவில் மாநகராட்சியுடன் அருகில் உள்ள தெங்கம்புதூர் மற்றும் ஆளூர் பேரூராட்சிகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யலாம் என்ற அரசின் உத்தேச முடிவினை அறிவித்தும், இவ்வுத்தேச முடிவு குறித்து தொடர்புடைய மாநகராட்சிக்கு வரி செலுத்துவோர் மற்றும் பேரூராட்சிகளில் வசிப்போர் எவருக்கும் ஆட்சேபணைகள் ஏதேனுமிருப்பின், அவற்றை அறிவிக்கை அரசிதழில் வெளியிடப்பட்ட ஆறு வார காலத்திற்குள் அரசுக்கு அனுப்பிவைக்கலாம் எனவும் மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ஆணைகள் / அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன. இவ்வறிவிக்கைகள் 14.10.2021–ம் நாளிட்ட தமிழ்நாடு அரசின் சிறப்பிதழ் எண்.487–ல் வெளியிடப்பட்டுள்ளன.

**3.** மேற்குறிப்பிடப்பட்ட நாகர்கோவில் மாநகராட்சியுடன் அருகில் உள்ள தெங்கம்புதூர் மற்றும் ஆளூர் பேரூராட்சிகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யலாமென்ற அரசின் உத்தேச முடிவு குறித்து மேற்படி ஆறு வார காலத்தில் ஆட்சேபணைகள் ஏதும் அரசில் பெறப்படவில்லை.

**4.** நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட தமது கடிதத்தில், மேற்குறிப்பிடப்பட்டவாறு நாகர்கோவில் மாநகராட்சியின் எல்லைகளை விரிவாக்கம் செய்யலாம் என்ற உத்தேச முடிவு குறித்த அரசாணைக்கு, தெங்கம்புதூர் மற்றும் ஆளூர் பேரூராட்சி பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் ஏதும் இல்லை என பேரூராட்சிகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளதாகவும், மேலும், தமது இயக்குநரகத்திலும் மேற்படி அரசாணைக்கு, பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**5.** மேலும், பேரூராட்சிகளின் தீர்மானங்கள் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் பரிந்துரைக்கேற்ப தெங்கம்புதூர் மற்றும் ஆளூர் ஆகிய இரண்டு பேரூராட்சிகளை இணைத்து நாகர்கோவில் மாநகராட்சியின் எல்லைகளை விரிவாக்கம் செய்யலாமென்ற உத்தேச முடிவினை உறுதி செய்து அரசாணை பிறப்பிக்க அரசுக்கு பரிந்துரை செய்வதாகவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**6.** இந்நிலையில், அரசு கவனமான பரிசீலனைக்குப் பின்னர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரைகளை ஏற்று, நாகர்கோவில் மாநகராட்சியுடன் தெங்கம்புதூர் மற்றும் ஆளூர் பேரூராட்சிகளை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யலாமென்ற அரசின் உத்தேச முடிவினை உறுதிசெய்து, 2019ஆம் ஆண்டு நாகர்கோவில் மாநகராட்சிச் சட்டத்தின் பிரிவு 3(1)-ன் கீழ் நாகர்கோவில் மாநகராட்சியின் எல்லைகளை விரிவாக்கம் செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

**7.** இதன்படி, 2019 ஆம் ஆண்டு நாகர்கோவில் மாநகராட்சிச் சட்டத்தின் பிரிவு 3(1)–ன் கீழ் இவ்வாணையுடன் இணைக்கப்பட்டவாறான அறிவிக்கைகள் (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்), 07.12.2021–ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் வெளியிடப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்:–**
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–01.
(இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்ட அறிவிக்கைகளை
தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடவும் மற்றும் அதன்
50 பிரதிகளை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28.
கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர்,
நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர்,
(நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)
தொடர்புடைய பேரூராட்சி செயல் அலுவலர்கள்
(பேரூராட்சிகளின் ஆணையர் வழியாக)

**நகல்:–**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9
சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், அரும்பாக்கம், சென்னை–106.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5, ந.ப.1 மற்றும் அ.ந.2) துறை, சென்னை–9.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

ஆ. பாண்டுரங்கன் 7/12/24

**பிரிவு அலுவலர்.**

## APPENDIX.

## NOTIFICATION.

In exercise of the powers conferred by the first proviso to sub-section (1) of section 3 of the Nagercoil City Municipal Corporation Act, 2019 (Tamil Nadu Act 11 of 2019), the Governor of Tamil Nadu, after consultation with the Municipal Corporation of Nagercoil, hereby alters the limits of the city of Nagercoil so as to include therin the entire area comprised in the following local authorities, the draft of the same having been previously published, as required under the second proviso to sub-section (1) of the said section 3:—

| Sl. No. | Name of the local authority |
|---|---|
| 1. | Thengampudur Town Panchayat |
| 2. | Aloor Town Panchayat |

2. Based on the above inclusion, wards will be divided for the next ordinay election.

**SHIV DAS MEENA**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

[signature] 7/1/22

SECTION OFFICER.